# கோவில்பட்டி நகராட்சி

## மன்மத – விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 14–ஆம் தேதி ஆங்கில வருடம் நவம்பர் மாதம் 30.11.2018–ம் தேதி வெள்ளிக் கிழமை விவாதித்து முடிவெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கூட்டப் பொருள்களின் விபரம்

| மன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மன்றப்பொருள் | மன்றத் தீர்மானம் |
|---|---|---|
| **30.11.2018** | **பொருள் எண்: 1**<br>தமிழ்நாடு அரசு மருத்துவ சேவை கழகம், சென்னை நிறுவனத்தின் கடித எண்.015/M(P) / INSECT-LARVI (III) / TNMSC2017 நாள்: 14.11.2018–ல் கொசுப்புழு ஒழிப்பு மருந்து (Lovicide) டெமிபாஸ் 50%EC மருந்தை விநியோகம் செய்வதற்கு M/s.Paramount Pesticides Limited என்ற நிறுவனத்தை LI Supplier ஆக நியமித்து ரூபாய் 625/லிட்டர் + GST 18% என்ற நிர்ணயிக்கப்பட்ட விலையில் கொள்முதல் செய்வதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சி மன்றப் பொருள் எண்.3054 நாள்: 30.04.2018–ல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செலவினத் தொகையோடு உத்தேச கூடுதல் செலவினத் தொகை ரூ.50000/–க்கு மேற்படி TNMSC-ஆல் நிர்ணயிக்கப்பட்ட நிறுவனத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் கொள்முதல் செய்து கொள்ளுவதற்கும் மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.2122/2018/எச்1) | தீர்மான எண்.3369 அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 2**<br>தமிழ்நாடு அரசு மருத்துவ சேவை கழகம், சென்னை நிறுவனத்தின் கடித எண்.015/M(P)/INSECT-LARVI(II)/TNMSC2017 நாள்:14.11.2018–ல் முதிர்கொசு ஒழிப்பு மருந்து (Adulticide) பைரீத்திரம் 2% எக்ஸ்ட்ராக்ட் மருந்தை விநியோகம் செய்வதற்கு M/s.Paramount Pesticides Limited என்ற நிறுவனத்தை LI Supplier ஆக நியமித்து ரூபாய் 1100/லிட்டர் + GST18% என்ற நிர்ணயிக்கப்பட்ட விலையில் கொள்முதல் செய்வதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சி மன்றப்பொருள் எண்.3053 நாள்: 30.04.2018–ல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செலவினத் தொகையோடு உத்தேச கூடுதல் செலவினத் தொகை ரூ.90000/–க்கும் மேற்படி TNMSC-ஆல் நிர்ணயிக்கப்பட்ட நிறுவனத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் கொள்முதல் செய்து கொள்வதற்கும் மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 2093/2018/எச்1) | தீர்மான எண்.3370 அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 3**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு TN69AX2778 நாய் வாகனத்திற்கு 19.12.2018–ல் தகுதி சான்று காலம் முடிவடைவதால், தகுதி சான்று பெற வாகனத்திலுள்ள பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.20000/– மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 6285/2018/எச்1) | தீர்மான எண்.3371 அனுமதிக்கப் பட்டது. |

**பொருள் எண்: 4**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு TN69AX2778 நாய் வாகனம் இரண்டு டயர்கள் வெடித்து வாகனத்தை இயக்க முடியாத நிலையில் உள்ளதால் பு.திதாக இரண்டு டயர்கள் வாங்குவதற்கான கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | அபிராமி டயர்<br>மெயின்ரோடு,<br>கோவில்பட்டி–628 501. | ரூ. 2800/– (ஒரு டயரின் விலை) |
| 2. | ஆறுமுகம் டயர்<br>பஸ்டான்ட்ரோடு,<br>சுரண்டை – 627 859 | ரூ. 3000/–(ஒரு டயரின் விலை) |
| 3. | ஸ்ரீ குரு டயர்ஸ்<br>குறிஞ்சி நகர்,<br>சாத்தூா் – 626 203. | ரூ.2900/– (ஒரு டயரின் விலை) |

அலுவலக குறிப்பு:-

1. குறைவான விலைப்புள்ளி அளித்த கோவில்பட்டி அபிராமி டயர் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. டயர் செலவு தொகை ரூ.2800/–ஐ அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 6285/2018/எச்1)

தீர்மான எண்.3372 அனுமதிக்கப் பட்டது.

**பொருள் எண்: 5**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு TN69AX2778 நாய் வாகனம் இரண்டு டயர்கள் வெடித்து வாகனத்தை இயக்க முடியாத நிலையில் உள்ளதால் புதிதாக இரண்டு டயர்கள் வாங்குவதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.6000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 6285/2018/எச்1)

தீர்மான எண்.3373 அனுமதிக்கப் பட்டது.

**பொருள் எண்: 6**

கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட சந்தைபேட்டை தெருவில் அமைந்துள்ள திரு.S.தஙகராஜ் என்பவருக்கு சொந்தமான பழைய கதவு எண்.53 கொண்ட கட்டிடம் தொடர்பாக திரு.S.இராமனுஜமோகன் என்பவரால் சென்னை உயர்நீ.மின்ற மதுரைக்கிளை நீதிமன்றத்தில் CRP (PD) (MD) 1827/2018 மற்றும் CMP (MD) 8000/2018 எண்ணிடப்பட்ட வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும் மற்றும் வழக்கானது நீதிமன்றம் முன்பாக 27.08.2018–ம் தேதியன்று விசாரணைக்கு வந்ததாகவும் மற்றும் Private Notice அனுப்பிட தெரிவித்ததாக உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.M. முத்துகீதையன் மற்றும் திரு.D.ஸ்ரீனிவாசராகவன் என்பவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வழக்கின் மனு விசாரணைக்கு 12.09.2018–ம் தேதியன்று ஆஜராகிட தெரிவித்து வரப்பெற்றுள்ள மேற்படி கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

வழக்கின் அவசர அவசியம் கருதி நகராட்சி வழக்குகளை

தீர்மான எண்.3374 அனுமதிக்கப் பட்டது.

| | | |
|---|---|---|
| | ஏற்கனவே ஏற்று நடத்தி வரும் வழக்கறிஞர் திரு.P.சீனிவாசன் அவர்களை நியமித்து மன்ற அனுமதி எதிர்நோக்கி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கும் மற்றும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 7888/2014/எப்1 | |
| | **<u>பொருள் எண்: 7</u>**<br>இந்நகராட்சியில் உள்ள பார்க் மேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகத்தினுள் உள்ள 5.0Kg/hr. Capacity கொண்ட Gas chlorinator இயந்திரத்தை வருடாந்திர பராமரிப்பு செய்வதற்கு அனுமதியும், அதற்கான உத்தேச செலவீனம் ரூ.150000/—க்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வேண்டபப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>:-<br>மன்றம் இப்பணியை குடிநீர் பணியின் அவசியம் கருதி குடிநீர் நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம். | தீர்மான எண்.3375 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 8</u>**<br>இந்நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள 7 எண்ணம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதால் பொறியியற் பிரிவில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 10 பணியாளர்கள் தற்காலிகமாக ஒரு வருடத்திற்கு மட்டும் குடிநீரின் அத்தியாவசியம் கருதி செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.20லட்சத்திற்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வேண்டபப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>:- மன்றம் இப்பணியை குடிநீர் நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம். | தீர்மான எண்.3376 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 9</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட நகராட்சி பஙகளாதெரு பள்ளிக்கு நாற்காலி, மேஜை, அலமாரி வாஙகுவதற்கு அனுமதியும் அதனை அரசு நிறுவனமான சர்வோதாயா சஙகம், கோவில்பட்டி மூலம் ரூ.92064/—மதிப்பீட்டில் வாஙகுவதற்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>:- மன்றம் இப்பணியை கல்விநிதியின் கீழ் மேற்கொள்ளஅனுமதிக்கலாம். | தீர்மான எண்.3377 அனுமதிக்கப் பட்டது. |
| | **<u>பொருள் எண்: 10</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, வள்ளுவர்நகர் கிழக்கு 4வதுதெரு மற்றும் மேற்கு தெருவில் உடைந்த நிலையில் உள்ள சிறுபாலத்தினை புதியதாக அமைத்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.0.85லட்சத்திற்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>:- மன்றம் இப்பணியை பொதுநிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம். | தீர்மான எண்.3378 அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 11</u><br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட உழவர்சந்தை அருகில் உள்ள பழுதடைந்த சிறுபாலத்தை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைப்பதற்கும் அதற்கான உத்தேச செலவின மதிப்பீட்டுத் தொகை ரூ.85,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.3379 அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 12</u><br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21ல் அமைந்துள்ள பகவத்சிங தெருவில் உள்ள சாலையை கான்கிரீட் போட்டு சீரமைக்கவும் மற்றும் சாய்வுதளம் அமைக்கவும், கன்னிவிநாயகர்கோவில் தெருவில் பொதுமக்களின் நலன் கருதி சாய்வுதளம் அமைக்க அதற்கான உத்தேச செலவின் மதிப்பீட்டு தொகை ரூ.87,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.3380 அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 13</u><br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.36ல் சுப்பிரமணியபுரம் 4வதுதெருவில் அமைந்துள்ள பழுதடைந்த சிறுபாலத்தை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைப்பதற்கும் அதற்கான உத்தேச செலவின மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.3381 அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 14</u><br>கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் கிழக்கு பகுதி முதல்தளத்தில் கடை எண்.17ற்கு 30.11.2018ம் தேதியில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி ஏலத்தில் யாரும் கலந்துகொள்ளவில்லை மற்றும் பொதுஏலம் நடைபெற்றதில் கீழ்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வரப்பெற்று தனித்தனியாக வைப்புத்தொகை செலுத்தப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஏலதாரர் பெயர்</th><th>பொது ஏ ல கேள்வி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>திரு.வ. சுதாகர்,<br>த/பெ. வசந்தகுமார்,<br>15பி1, சுப்பிரமணியபுரம்,<br>3வதுதெரு,<br>கோவில்பட்டி.</td><td>6,500</td></tr>
<tr><td>2.</td><td>திருமதி.பி. தமிழரசி,<br>த/பெ. சுப்பையா பாண்டியன்,<br>15பி1, சுப்பிரமணியபுரம்,<br>3வதுதெரு,<br>கோவில்பட்டி.</td><td>6,000</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.3382 அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்காணும் விபரப்படி இரண்டு நபர்களில் திரு.வ.சுதாகர் என்பவர் உயர்ந்தபட்ச பொது ஏலம் கோரியுள்ளார். எனவே உயர்ந்தபட்ச மாதவாடகை தொகை ரூ.6,500/–க்கு அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் கிழக்கு பகுதி முதல் தளத்தில் கடை எண்.17யை 01.12.2018 முதல் 30.11.2021 வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை இன பொதுஏலம் நிபந்தனைகளின்படி நடத்தி கொள்ளும் உரிமம் ஒப்படைப்பு செய்வதற்கு மன்றம் அங்கீகாரத்திற்காக.<br>அலுவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 7850/2015/அ3) | |
| | **பொருள் எண்: 15**<br>கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் திறந்தவெளி கடைகளுக்கு 30.11.2018ம் தேதியில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை மற்றும் பொதுஏலம் நடைபெற்றதில் கீழ்காணும் நபர்கள் பொதுஏலத்தில் தனித்தனியாக வைப்புத்தொகை செலுத்தப்பட்டுள்ளது. | தீர்மான எண்.3383 அனுமதிக்கப் பட்டது. |

| வ. எண். | ஏலதாரர் பெயர் | பொது ஏ ல கேள்வி தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.வ. சுதாகர்,<br>த/பெ. வசந்தகுமார்,<br>15பி1, சுப்பிரமணியபுரம்,<br>3வதுதெரு,<br>கோவில்பட்டி. | 6,500 | –– |
| 2. | திருமதி.பி. தமிழரசி,<br>த/பெ. சுப்பையா பாண்டியன்,<br>15பி1, சுப்பிரமணியபுரம்,<br>3வதுதெரு,<br>கோவில்பட்டி. | 6,000 | –– |
| 3. | திரு.எம். தாளமுத்து<br>514–5பி, எஸ்.எஸ்.நகர்,<br>பசுவந்தனைரோடு,<br>கோவில்பட்டி. | 21, 22 | 800 |
| 4. | திரு.ஆர். அழகுராஜா,<br>514–பி, எஸ்.எஸ்.நகர்,<br>பசுவந்தனைரோடு,<br>கோவில்பட்டி. | 33, 34 | 800 |
| 5. | திரு.எம். முருகன்<br>516–பி,<br>பசுவந்தனைரோடு,<br>கோவில்பட்டி. | 35, 36 | 800 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி ஏலகேள்வியில் யாரும் கலந்துகொள்ளவில்லை. பொதுஏல கேள்வி தொகையில் வ.எண்.1 முதல் 5வரை உள்ள நபர்கள் மேற்கண்ட கடைகளை பொதுஏலத்தில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு ஏலம் கோரியுள்ளனர். தினசரி சந்தையில் திறந்தவெளி ஒரு கடையானது 6x6=36 சதுரஅடிகளே கொண்ட பிளாட்பாரம் கடையாகும். இத்திறந்த வெளிகடைகள் பல மாதஙகளாக ஏலம் எவரும் கோராமல் இருந்து வந்தனர். இதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டு வந்தது. மேலும் தினசரி சந்தையின் உள்ளே சாலையை ஆக்கிரமிப்பு செய்து சிலர் கடை வைத்து நடத்தி வந்தனர். ஆக்கிரமிப்புகளை அகற்றி சீர்செய்து நடைபாதை வியாபாரிகள் வாழ்வாதாரம் காப்பதற்காகவே இவ்திறந்த வெளி கடைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே அரசு மதிப்பீட்டின்படி ஒரு கடைக்கு மாதவாடகை ரூ.800/–வீதம் (துரை வாடகை அடிப்படையில்) நிர்ணயிக்கப்பட்டு மேற்கண்ட நபர்கள் பொது ஏலத்தில் கலந்துகொண்டு அவர்களுக்கு வழஙகப்பட்டுள்ளது. 01.12.2018 முதல் 30.11.2021 வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை இன பொதுஏலம் நிபந்தனைகளின்படி நடத்தி கொள்ளும் உரிமம் ஒப்படைப்பு செய்வதற்கு மன்றம் அஙகீகாரத்திற்காக.

அலுவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 7850/2015/அ3)

**பொருள் எண்: 16**

தீர்மான எண்.3384 அனுமதிக்கப் பட்டது.

கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் கடை எண்.392ற்கு 30.11.2018ம் தேதியில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி ஏலத்தில் யாரும் கலந்துகொள்ள வில்லை. மற்றும் பொதுஏலம் நடைபெற்றதில் கீழ்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வரப்பெற்று தனித்தனியாக வைப்புத்தொகை செலுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | ஏலதாரர் பெயர் | பொதுஏல கேள்வி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.வி. ஜமாலுதீன்,<br>த/பெ. வருசை முகம்மது,<br>18, கலைக்காரதெரு,<br>2வதுதெரு, கோவில்பட்டி.<br>தூத்துக்குடி மாவட்டம். | 2,300 | –– |
| 2. | திரு.எஸ். அப்துல் ஹாசிம்,<br>த/பெ. எ.சையதுஉமர்,<br>46/10, முகம்மது சாலியாபுரம்,<br>கோவில்பட்டி.<br>தூத்துக்குடி மாவட்டம் | 1,800 | –– |

| | | |
|---|---|---|
| | மேற்காணும் விபரப்படி இரண்டு நபர்களில் திரு.வி.ஜமாலுதீன் என்பவர் உயர்ந்தபட்ச பொதுஏலம் கோரியுள்ளார். எனவே உயர்ந்தபட்ச மாதவாடகை தொகை ரூ.2,300/–க்கு தினசரி சந்தையில் கடை எண்.392யை 01.12.2018 முதல் 30.11.2021 வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை இன பொதுஏலம் நிபந்தனைகளின்படி நடத்தி கொள்ளும் உரிமம் ஒப்படைப்பு செய்வதற்கு மன்றம் அங்கீகாரத்திற்காக.<br>அலுவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 7850/2015/அ3) | |
| | **பொருள் எண்: 17**<br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் மனிதகசடு சுத்திகரிப்பு நிலையம் (FSTP) நிர்வாக அனுமதி வழஙகியதின்பொருட்டு தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு கருத்துரு சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக சிதம்பராபுரம் உரக்கிடஙகில் contour Survey level செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் அதனை குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Sri Sai recycle Solutions, Madurai மூலம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.25230/–க்கும் மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு:- மன்றம் இப்பணியை பொதுநிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம். | தீர்மான எண்.3385 அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 18**<br>இந்நகராட்சி பொறியியற் பிரிவில் உள்ள பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள கீழ்க்கண்ட அடிபம்பு சாமான்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட மின்மோட்டார்களை ஏலம் மூலம் அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**2014-15 to September 2018** | தீர்மான எண்.3386 அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| 1. | 1 ¼ “ GI Pipe | 750 Nos |
| 2. | ½ “ Connecting rod | 852 Nos |
| 3. | ¼ “ GI Cupling | 554 Nos |
| 4 | 2 ½ “ Cylinder body | 337 Nos |
| 5 | handle assembly | 39 Nos |
| 6. | Chain with cupling | 155 Nos |

| | | |
|---|---|---|
| 7. | handle aricle (geft) | 131 Nos |
| 8. | Water tank (muth) | 39 Nos |
| 9. | Stand | 37 Nos |
| 10. | 0.50 HP Motor | 25 Nos |

அலுவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதி வழஙகலாம்.

**பொருள் எண்: 19**

நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களது அலுவலக ந.க.எண்.13193/2017-LA1. நாள்.27.03.2018 ம் தேதிய கடிதத்தில் 05.2.2018 ம் தேதிய அரசு தலைமை செயலாளர் அவர்களது தலைமையில் அனுமதியற்ற மனைப்பிரிவுகள் முறைப்படுத்துதல் திட்டம் 2017ன்கீழ் விற்பனை செய்யப்பட்ட தனித்த மனைகளை முறைப்படுத்துதல் சம்பந்தமாக வழிமுறைகள் அறிமுகப்படுத்துதல் தொடர்பான ஆய்வு கூட்ட அறிவுரைகளில் கண்டுள்ள படி, நகர் ஊரமைப்பு துறையினால் மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட உடன் தனித்த மனைகளுக்கு முறைப்படுத்துதல் உத்தரவு வழங்குவதற்கு முன்பாக உள்ளாட்சி ஆனது மேற்கண்ட இடத்தினை ஆய்வு செய்து மேற்படி மனைப்பிரிவிலுள்ள சாலைகளை ஏற்றுக் கொள்ள தீர்மானம் இயற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்நகராட்சி எல்லையினுள் அமைந்துள்ள புதுக்கிராமம் ரோட்டில், டவுண் சர்வே வார்டு D, பிளாக் எண்.7, மற்றும் நகரளவை எண்-45/1,2pt-ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள தனிமனைகள் வரன்முறைப்படுத்தி கொள்வது சம்பந்தமாக மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருநெல்வேலி அவர்களது ந.க.எண்.1310/2017 எண்ணிடப்பட்ட 13.04.2018-ம் தேதிய கடிதத்தில் சம்பந்தப்பட்ட மனுதாரர் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அரசாணையில் கண்டுள்ள கட்டணங்களை பெற்றுக் கொண்டு மற்றும் உரிய நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் முறைப்படுத்துதல் சம்பந்தமான அரசாணை எண் 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017 - ல் விதி 7(g)(ii) -ன் படி மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவுகளுக்கான சாலைகளை மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மற்றும் உத்தரவு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. எனவே, மேற்படி மனைப்பிரிவில்

தீர்மான எண்.3387 அனுமதிக்கப் பட்டது.

| | | |
|---|---|---|
| | **அமைந்துள்ள சாலைகளை நிலையில் உள்ளவாறு நகராட்சி தன்வசம் ஏற்றுக் கொள்ளவும் மற்றும் சர்வே ஆவணங்களில் உட்பிரிவு செய்து நகராட்சி சாலையாக பெயர் மாற்றம் செய்திட வருவாய் துறைக்கு அனுப்பி வைத்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**(ந.க.எண்.2630/2018/எப்1)** | |
| | **பொருள் எண்: 20**<br>தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2018–19ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34, அறிவிப்பு எண்.14ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையஙகள் (Automatic Vending Centre CSR) நிதி மூலம் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் கொள்கை அறிவிப்பின்படி பணிகள் மேற்கொள்ள அறிவுரை வழஙகப்பட்டது.<br>அதனடிப்படையில் தற்பொழுது முதற்கட்டமாக இந்நகராட்சிக்குட்பட்ட 26 இடஙகளில் சுத்திகரிக்கப்பட்ட தானியங்கும் குடிநீர் மையஙகள் அமைப்பதற்கும், அதனைத் தொடர்ந்து பத்து ஆண்டுகள் இயக்கி பராமரிப்பு செய்திடவும் தகுதி வாய்ந்த நிறுவனஙகளிடமிருந்து Expression of Interest (EOI) பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>மேற்கண்ட பணிக்கு 16.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது. தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ள ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி உரை திறக்கப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி விலை விபரஙகள் அளிக்கப்பட்டுள்ளது. | தீர்மான எண்.3388 அனுமதிக்கப் பட்டது. |

| S.No. | Description of work | Rate quoted in Rupees |
|---|---|---|
| 1. | Establishment of 1000 Lr/Hr Capacity community drinking water system through reverse osmosis with UV treatment in Kovilpatti Municipality. | |
| 1.01 | Rate to remitted to the Municipality (Rupees per 20 Ltr) | 1.00 |
| 1.02 | Rate to be charged for Sale to public (Rupees per 20 Ltr) | 6.90 |
| 1.03 | Rate to be charged for Sale to Public (Rupees per / Ltr from chilling machine) | 1.00 |

மேற்கண்ட விலை விகிதம் கொடுத்துள்ள M/S Dharana Infrastructure Projects Pvt. Ltd., Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்: 21</u>**

**கோவில்பட்டி நகராட்சி எல்கையினுள் நெடுஞ்சாலைத்துறை உட்கோட்ட பராமரிப்பில் உள்ள மாநிலச் சாலையான மதுரை - கன்னியாகுமரி சாலையில், கி.மீ.92/2 வலதுபுறம் ஸ்டேட் பாங்க் அருகில் தனியார் டீ ஸ்டால் அமைக்க திரு.ராஜேந்திரன் என்பவருக்கு டீ ஸ்டால் கடை அமைக்க இடம் ஆய்வு செய்து உரிய தடையில்லா சான்று வழங்க கோரி. நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் க (ம) ப. கோவில்பட்டி அவர்களது கடிதம் எண் 35/2018/இவஅ, நாள். 21.06.2018 உடன் வரப்பெற்றது.**

தீர்மான எண்.3389 அனுமதிக்கப் பட்டது.

| | | |
|---|---|---|
| | மேற்படி டீ ஸ்டால் கடை அமைக்க காவல்நிலையம் அவர்களால் தடையில்லா சான்று வழங்கப்பட்டுள்ளது. 1920 ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 183 ன் கீழ் உரிய ஆக்கிரமிப்பு கட்டணம் வசூலித்து தடையில்லா சான்று வழங்கவே வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடை அமைக்க அனுமதி கோரும் இடமானது நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சாலையாகும். இருப்பினும், நகராட்சி எல்லையினுள் அனைத்து சாலைகளிலும் பெட்டிகடை வைத்துக் கொள்ள ஆக்கிரமிப்பு கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். ஆக்கிரமிப்பு கட்டணம் குறைந்தபட்சம் ரூ.7200/- க்கு குறையாமலும், அதிகபட்சம் ரூ.9000/- க்கு மிகாமலும் நிர்ணயம் செய்யலாம். மேலும் ஆண்டொன்டிற்கு மேற்படி ஆக்கிரமிப்பு கட்டணம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை வசூல் செய்து கொள்ளவும் மற்றும் நெடுஞ்சாலை துறையின் உரிய அனுமதி பெற்று கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அ.கு-</u><br>அனுமதி கோரிய இடத்தில் டீ ஸ்டால் கடையானது பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் நகராட்சி மழைநீர் வடிகால் ஓடைகளுக்கும் இடையூறு செய்யக்கூடாது எனவும் நகராட்சிக்கு மற்றும் நெடுஞ்சாலைதுறைக்கு உரிய இடமானது பிற்காலத்தில் தேவைப்படும் பட்சத்தில் எவ்வித முன் அறிவிப்புமின்றி ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின்படி தடையின்மை சான்று வழங்கவும் ஆண்டிற்கான ஆக்கிரமிப்பு கட்டணம் ரூ.9000/- என நிர்ணயம் செய்திடவும் மேற்படி கட்டணத்தை வருவாய்ப்பிரிவு மூலம் கேட்பு தயார் செய்து வசூல் செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1649/18/எப்1) | |
| | **<u>பொருள் எண்: 22</u>**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் எண்.TN69R8104 டயர்களின் ரீபட்டன் பழுதுகளை நீக்கம் செய்ய விலைப்புள்ளி பெறப்பட்டு உத்தேச செலவினத் தொகை ரூ.11,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u>:- மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 2863/2018/எச்1) | தீர்மான எண்.3390 அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்: 23**<br>தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவன இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண்.848/2018/A2 நாள்:10.10.2018ல்2018–2019ம் ஆண்டிற்கு ஆண்டுதோறும் செலுத்தப்பட்டு வரும் நகராட்சி பங்குத் தொகை ரூ.1,50,000/– (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்) செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்காணும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் செலுத்தப்பட்டு வரும் நகராட்சி பங்குத் தொகையாக 2018–19ம் ஆண்டிற்கு ரூ.1,50,000/–(ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.2915/2002/சி1 | தீர்மான எண்.3391<br>அனுமதிக்கப் பட்டது. |